# Gospel Truth
# காஸ்பெல் ட்ரூத்
உலகளாவிய திருச்சபைகளை ஊக்குவிப்பதற்கான வேதாகம விளக்கங்கள்

ISSUE - 54 | International Editor : MICHAEL. W. SMITH | இதழ் - 54


## மாதிரி மற்றும் சாயல் கிறிஸ்துவே பொருள்

ஆதியிலே தேவன் இஸ்ரவேல் ஜனங்களுக்கான ஆராதனை பலிகள் மற்றும் கட்டளைகளை தெய்வீக நோக்கத்தோடு திட்டம் பண்ணி வைத்திருந்தார். அவைகள் நோக்கம் ஏதும் இல்லாத பண்டிகைகள் அல்ல, ஆனால் ஒரு உன்னதமான நோக்கத்திற்கு முன் அடையாளமாக கொண்டுவரப்பட்டவைகள். பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்டுள்ள சில பண்டிகை ஆசரிப்புகள், நிகழ்வுகள், ஜனங்கள் யாவும் கிறிஸ்துவை முன் குறித்து, சுட்டிக்காட்டப்பட்ட நிழலாட்டமான காரியங்களே இவைகளையே மாதிரிகள் எனலாம். புதிய ஏற்பாட்டின் ஆவிக்குரிய உண்மைக்கு நிழலாக முன்பதாகவே செய்யப்பட்ட செயல்பாடுகள் அவைகள் எபி 10 : 1 கூறுகையில் அவைகள் வருங்காரியங்களுக்கு நிழலாயிருக்கிறது; அவைகளின் பொருள் கிறிஸ்துவைப் பற்றினது. கொலோ 2 : 17.

நிழலாக கொடுக்கப்பட்டவைகள் குழப்பத்திற்கானவைகள் அல்ல, ஆனால் போதிக்கப்பட வேண்டியவை ஒவ்வொரு காணிக்கையிலும், சடங்காச்சாரங்களிலும், பலியிடும் இடத்திலும் தேவன் தம்முடைய ஜனங்களுக்கு பரிசுத்தத்தையும், தியாகத்தையும் அவரை அணுகும் முறைகளையும் கற்றுக் கொடுத்திருக்கிறார். திரும்பத் திரும்ப பழி செலுத்துதல் பரிசுத்த ஆசாரித்துவம், பிரித்தெடுக்கப்பட்ட பரிசுத்த ஸ்தலம், இவை யாவும் கிறிஸ்துவில் நாம் காணும் பரிபூரணத்தையே சுட்டிக் காட்டுகிறது. இவை யாவும் மேசியாவுக்காக அநேக இருதயங்களை கறை திரை முதலானவைகள் ஏதுமின்றி தயார்படுத்தும் விதமாக சீர்செய்யப் படுவதற்கு பயிற்றுவிப்பாளராய் இருந்தது. பழைய ஏற்பாட்டின் உருவங்கள், சாயலும் நிழலுமானவைகள் உண்மையான நிறைவேறுதல் புதிய ஏற்பாட்டில் பூரணமாகிறது அதுவே பொருள். நியாயப்பிரமாணத்தின் கீழ் பொருட்களாகவும் சரித்திரமாகவும் பார்க்கப்பட்டவைகள் ஒவ்வொன்றும் உண்மையில் ஆவிக்குரிய மற்றும் நித்தியமாக கிறிஸ்துவில் பூரணமாயிற்று.

தேவன் அருளிய அடையாளங்கள் மற்றும் கட்டளைகளின் வழியாகவே பூரணம் மீட்பு என்பது முன்னோட்டமாக இருந்தது. பின்பு கிறிஸ்துவின் வழியாக அது நிறைவேறும்போது, ஜனங்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட இரட்சகரை கண்டறிந்து கொண்டனர்.

வேதம் நமக்கு தெளிவாக விவரிக்கிறது ஆதாம், முதல் மனுஷன் பின்பு வந்தவருக்கு முன்னடையாளமானவன் (ரோம 5 : 14) அவன் கிறிஸ்துவின் மாதிரி கடைசி ஆதாம் ஜீவனை கொண்டு வந்தவர். முதலாம் ஆதாமோ மரணத்தை கொண்டு வந்தவர். ஒரே மனுஷனுடைய மீறுதலினாலே மனுக்குலத்தின் மீது பாவம் வந்தது. கிறிஸ்துவோ ஜெயம் பெற்று நீதியினாலே நித்திய ஜீவனையும், நம்பிக்கையும் கொண்டு வந்தார். பஸ்கா ஆட்டுக்குட்டி என்பது நாம் நன்றாக அறிந்த ஒரு முன்மாதிரி எகிப்திலே வீட்டின் நிலைக்கால்களில் பூசப்பட்ட ஆட்டுக்குட்டியின் இரத்தம் சங்காரதூதனிடம் இருந்து இஸ்ரவேல் ஜனங்களை காப்பாற்றியது.

புதிய ஏற்பாட்டில் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காய் பலியிடப்பட்டிருக்கிறாரே (1 கொரி 5 : 7) ஆட்டுக்குட்டி என்பது ஒரு நிழல். கிறிஸ்துவே பொருள், அவருடைய இரத்தமே மரணத்தினின்று நம்மை மீட்டு இரட்சிக்கும். வெண்கலத்தினால் செய்யப்பட்ட சர்ப்பம், வனாந்தரத்தில் உயர்த்தப்பட்டது ஒரு மாதிரி உருவம். சர்ப்பத்தினால் கடிக்கப்பட்டவன் உயர்த்தப்பட்ட இந்த சர்ப்பத்தை நோக்கி பார்க்கும்போது பிழைப்பான். சர்ப்பமானது மோசேயினால் வனாந்தரத்திலே உயர்த்தப்பட்டதுபோல மனுஷகுமாரனும், யோவான் 3 : 14. விசுவாசத்தோடு, அதை நோக்கி பார்த்தவன் பிழைத்ததை போல, கிறிஸ்துவை விசுவாசிக் கிறவர்கள் நித்திய ஜீவனுக்கு பாத்திரவான்



சர்ப்பமானது மோசேயினால் வனாந்தரத்திலே உயர்த்தப்பட்டதுபோல மனுஷகுமாரனும், (யோவான் 3 : 14).


| உருவம் மற்றும் நிழல் | தலையங்கம் | ஆசரிப்பு கூடாரம் | பிரகாரம் & ஆசரிப்பு கூடாரத்தின் வேலைகள் | உடன்படிக்கைப் பெட்டி |
|---|---|---|---|---|
| 1 | 3 | 4-5 | 6-7 | 8 |

# வேதாகமம்,




## நமக்கு போதிப்பது என்ன..... ?

**தேவனுடைய வார்த்தை**
2 தீமோ 3 : 16-17 ; 2 பேது 1 : 20-21 ;
மத் 24 : 35

**அன்பு**
மத் 22 : 37-40 ; யோவா 14 : 21-23,
1 யோவா 4 : 7-11

**மனந்திரும்புதல் :**
அப் 3 : 19 ; 17 : 30 ; 2 கொரி 7 : 10

**புதுசிருஷ்டி**
யோவா 3 : 3-7 ; 2 கொரி 5 : 17 ; ரோம 6 : 1-4,
எபே 2 : 1, 5-6

**பாவத்திலிருந்து விடுதலை**
1 யோவா 5 : 18 ; மத் 1 : 21 ; யோவா 8 : 11

**பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுதல்**
அப் 1 : 8 ; 15 : 8-9 ; 19 : 2

**பரிசுத்தம் :**
லூக் 1 : 73-75 ; எபி 12 : 14 ; 1 பேது 1 : 15-16 ;
தீத்து 2 : 11-12 ; ரோம 6 : 22

**தேவனுடைய இராஜ்யம்**
லூக் 17 : 20-21 ; ரோம 14 : 17 ; யோவா 18 : 36.

**சபை-** அப் 2 : 47 ; எபே 4 : 4-6 ;
1 கொரி 12 : 12-13 ; கொலோ 1 : 18

**ஒற்றுமை**
யோ 17 : 20-23 ; கலா 3 : 28 ;
வெளி 18 : 2-4

**நியமங்கள்**
மத் 28 : 19-20 ; 26 : 26-30 ;
1 கொரி 11 : 23-27 ; யோவா 13 : 14-17

**தெய்வீக சுகமளிப்பு**
லூக் 4 : 18, ஏசா 53 : 4,5, யாக் 5 : 13-16

**விவாக முறைமை**
மத் 19 : 5-6 ; லூக் 16 : 18 ; ரோம 7 : 2-3 ;
1 கொரி 7 : 10, 11

**வெளிப்புற தோற்றம்**
1 தீமோ 2 : 9-10 ; 1 கொரி 11 : 14-15 ;
உபா 22 : 5

**கடைசிகாலம்**
2 பேது 3 : 7-12 ; யோவா 5 : 28 ,29 ;
2 கொரி 5 : 10 ; மத் 25 : 31-46

**தொழுதுகொள்ளுதல்**
யோவா 4 : 23,24 ; எபே 5 : 19 ;
2 கொரி 3 : 17

**சுவிசேம் அறிவித்தல்**
மாற் 16 : 15

ஆசரிப்புக் கூடாரத்தில் அமையப்பெற்ற மர வேலைகளும், சித்திர வேலைகளும் இன்னும் ஓர் மாதிரியான உருவம். எபி 8 : 5 கூறுகிறது. பரலோகத்தில் உள்ளவைகளின் சாயலுக்கும் நிழலுக்கும் ஒத்திருக்கிறது. பலிபீடம், மகா பரிசுத்த ஸ்தலம் என ஒவ்வொன்றும் கிறிஸ்து மற்றும் அவருடைய இரட்சிப்பின் உன்னத திட்டத்திற்கு நிழலாட்டமான காரியங்கள் தேவ பிரசன்னத்திற்கான வழி திறக்கப்படவில்லை. ஆனால் திரைசிலை இரண்டாகப் பிளந்து, தேவனோடு உள்ள உறவை சீர் செய்தது. ஆசாரியத்துவம் என்பது ஒரு முன்னோட்டமான மாதிரி அது கிறிஸ்துவின் நித்திய ஊழியத்தை சுட்டிக்காட்டுகிறது. நமக்கு முன்னோடியானவராகிய இயேசு மெல்கிசேதேக்கின் முறைமையின்படி நித்திய பிரதான ஆசாரியராய் நமக்காக அந்தத் திரைக்குள் பிரவேசித்திருக்கிறார் எபி 6 : 20.

எல்லா மனுஷரின் பாவத்திற்காகவும் ஒரே தரம் மரித்து தேவனோடு உள்ள உறவை சீர்படுத்தினார். எல்லாரும் ஒரே ஞானபானத்தைக் குடித்தார்கள். எப்படியெனில்,



அவர்களோடேகூடச் சென்ற ஞானக்கன்மலையின் தண்ணீரைக் குடித்தார்கள்; அந்தக் கன்மலை கிறிஸ்துவே. 1 கொரி 10 : 4. தண்ணீரின் குணாதிசயம் மாறாமல் நிலைத்திருப்பது போல கிறிஸ்துவானவர் தம்மை உண்மையாய் விசுவாசிக்கிற யாவருக்கும் ஆவிக்குரிய ஜீவத்தண்ணீரை அளிக்க வல்லவராய் இருக்கிறார்.

பழைய ஏற்பாட்டு வழிமுறைகள் யாவும் தற்காலிகமானது அந்த நியாய பிரமாணத்தின் கீழ் இருந்தவர்களால் சீர் செய்யப்பட முடியாத, ஆனால் வரப்போகிற காரியங்களுக்கு அதாவது கிறிஸ்துவின் வருகைக்கு நிழலாய் மாத்திரம் இருந்தது. இஸ்ரவேல் தேசத்தின் வரலாறு நமக்கு அநேக பாடங்களை சுட்டிக்காட்டுகிறது. பாவ அடிமைத்தனத்தை எகிப்து சுட்டிக்காட்டுகிறது. மீட்பராகிய கிறிஸ்துவை போல அன்று மோசே மாதிரியாக காணப்பட்டார். ஆவிக்குரிய வாழ்வின் ஜெயம் மற்றும் சுதந்திரத்தை காட்டும் வண்ணமாக, கானான் தேசமானது நிழலாட்டமாய் கொடுக்கப்பட்டது. கிறிஸ்துவானவர் வரப்போகிற நன்மைகளுக்குரிய பிரதான ஆசாரியராய் வெளிப்பட்டு, கையினால் செய்யப்பட்டதாகிய இந்தச் சிருஷ்டி சம்பந்தமான கூடாரத்தின் வழியாக அல்ல, பெரிதும் உத்தமமுமான கூடாரத்தின் வழியாகவும்,எபி 9 : 11 சொல்கிறது நிழலானது பொருளாய் மாத்திரம் இருந்தது. ஆனால் அதன் மாதிரி வரப்போகிற உண்மைக்கு வழி வகுத்தது. இவைகள் வேதத்தின் ஒருமைப்பாட்டையும் தேவனுடைய ஞானமுள்ள திட்டத்தையும் வெளிப்படுத்துகிறது. பழைய மற்றும் புதிய ஏற்பாடுகள் என்பது தனி தனி பாகங்கள் அல்ல ஆனால் ஆதி முதல் அந்த முறையிலான ஒரே தெய்வீக வெளிப்பாடு. கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களுக்கு உருவங்களின் மூலம் வெளிப்படுத்தினவைகள் யாவும் இயேசு கிறிஸ்துவின் வழியாக பூரணம் ஆயிற்று. மாதிரி மற்றும் நிழல்களின் வாயிலாக தேவன் தம்முடைய இரட்சிப்பின் வழியை எவ்வளவு அழகாக வாக்குத்தத்தங்களோடு தம்முடைய குமாரராகிய கிறிஸ்துவில் நிறைவாக்கினார். பண்டிகைகள் மற்றும் உருவங்களில் மறைந்திருந்த உண்மையான கருப்பொருளானது சுவிசேஷங்களின் மூலம் வெளிப்படுத்தப்படுகிறது. வேதத்தின் தெய்வீக அதிகாரத்தை புரிந்து கொள்ள முடிகிறது. நிழல் என்பது தற்காலிகமானது, அதன் பொருள் நித்தியமானது கிறிஸ்துவில் ஒவ்வொரு நிழலும் உருவம் பூரணமாயிற்று. அவரே பரிசுத்த ஆட்டுக்குட்டி நித்திய பிரதான ஆசாரியன் ஜீவனுள்ள ஆசரிப்பு கூடாரம். அவராலே பாவமன்னிக்கப் படுதலும், உள்ளான பரிசுத்த ஆவியானவர் வாசம் பண்ணுதலும், தேவனோடு உள்ள உறவை வலுப்படுத்தவும் கிறிஸ்துவின் வழியாக நாம் பிரவேசிக்க முடியும். இதுவே மகிமையான உண்மை. முன்பு நிழலாய் இருந்தது பின்பு இயேசு கிறிஸ்துவில் வெளிப்பட்டது. ■

*கர்த்தரின் சத்தியத்தை உலகமெங்குமுள்ள சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கித்து, ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்துவதுதான் இந்த இதழின் முக்கிய நோக்கம். எங்களுடைய இதழை ஆன்லைனில் படிக்க* **www.thegospeltruth.org** *என்ற இணையதள முகவரியை பார்க்கவும். உங்களது கிறிஸ்தவ நண்பர்கள் மற்றும் தெரிந்த விசுவாசிகளுக்கு இந்த இதழை அறிமுகம் செய்யுங்கள். அவர்களது முகவரிகளையும் எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். தமிழ்மொழியல்லாது வேறு பல மொழிகளிலும் பல நாடுகளில் இந்த இதழை அச்சிட்டு வெளியிடுகிறோம். இந்த பத்திரிகை தொடர்ந்து வெளிவர ஆதரவு தாருங்கள். படங்கள் அனைத்தும் அனுமதியோடே அச்சிடப்பட்டுள்ளது. உங்கள் கருத்துக்களையும் நன்கொடைகளையும் அனுப்பவேண்டிய முகவரி :–*

**ஆயர். W.S.வேதா, காஸ்பெல் ட்ருத், 2/227, சர்ச் தெரு,**
**கோலார்பட்டி , தென் இந்தியா - 642 107**

Editorial

# ஆசிரியரின் தலையங்கம்

... நியாயப்பிரமாணமானது வரப்போகிற நன்மைகளின் பொருளாயிராமல், அவைகளின் நிழலாய்மாத்திரம் இருக்கிறபடியால் – எபி 10 : 1

மோசேயின் நியாயப்பிரமாணத்தின் கீழ் ஆராதனை செய்து வந்த தேவ ஜனங்களுக்கு மகிமையான இரட்சிப்பின் திட்டத்தை இயேசு கிறிஸ்துவின் வழியாக அனுக்கிரகம் பண்ணும் படியாக நிழலாய் ஏற்படுத்தப்பட்டது. பழைய ஏற்பாடு புதிய ஏற்பாட்டில் நிறைவேற்றப்பட வேண்டியவைகளை அழகாக உருவகப்படுத்தியிருக்கிறது. இந்த மாத இதழின் தலைப்பு மாதிரி மற்றும் நிழல் குறிப்பாக, ஆசரிப்பு கூடாரத்தின் மாதிரி மற்றும் அதன் மரவேலைப்பாடுகள் குறித்து காணலாம். ஆசரிப்பு கூடாரத்தில் நாம் காணும் அடையாளமானது தற்செயலாய் உருவாக்கப்பட்டதல்ல ஆனால் தெய்வீக திட்டத்தின் அழகை பிரதிபலிக்கும்படி அதை தேவன் வடிவமைத்தார். பாவத்திற்காக பலியிடப்படும் மிருகங்கள், கழுவுவதற்காக ஏற்படுத்தப்பட்ட வெண்கல தொட்டி, பொன்னாலான பலிபீடத்தில் தகனிக்கும் முறைமைகள் யாவும் மாதிரியாக வெளிப்படுத்தப்பட்டவை.

இந்த இதழில் விளக்கமளிக்கப்பட்டுள்ள ஒவ்வொன்றும் வேதத்தின் அடிப்படையிலானது மேலும் கிறிஸ்துவின் மீட்பின் பணியினை செய்யும் நோக்கத்தை ஒலியூட்டுகிறது. ஆசரிப்புக் கூடாரத்தின் ஒவ்வொரு பொருட்களும் தெளிவாக ஆவிக்குரிய உண்மையை எடுத்துரைக்கிறது. வேதத்திற்கு புறம்பாக ஒவ்வொரு அடையாளமும் என்ன விவரிக்கிறது என்பதை நாம் பார்க்கவில்லை. இதை வாசிக்கிற நீங்கள் கிறிஸ்துவை பொருளாக கொண்டு மாதிரி விளக்கங்களை புரிந்து கொள்ளவும். நான்பாடல் எழுதும் போது புதிய உடன்படிக்கை அனுபவத்தின் உண்மைகளை உற்சாகத்தோடு பொங்கி வரும் வார்த்தைகளால் விவரித்திருப்பேன். மாதிரி மற்றும் நிழலாய் செய்யப்பட்ட காரியங்களின் அடித்தளத்திலிருந்து கற்றுக் கொள்ளும் போது தான் இன்று தேவனுடைய மீட்பின் திட்டம் நிறைவேறுதலை புரிந்து கொள்ள முடிகிறது. நன்றி தேவனே ஆசரிப்பு கூடாரத்தில் இஸ்ரவேலர்கள் செய்த ஆராதனை அனுபவத்தை விட மேலான ஆவிக்குரிய அனுபவத்தை இன்று நாங்கள் பெற்றிருக்கிறோம். நீங்கள் இன்னும் பிரகாரத்திலே நின்று கொண்டிருக்கிறீர்களா, அல்லது மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் நுழைந்து விட்டீர்களா? இயேசுவின் இரத்தத்தின் மூலம் வழி திறக்கப்பட்டு விட்டது உள்ளே வாருங்கள்.

**ஆன்லைனில்**

**அதிகமாக தெரிந்துகொள்ள**

www.thegospeltruth.org

**பதிவுசெய்து வெளியீட்டு காப்பகங்களுக்குள் உள்நுழைக**




**இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுவதற்கு நியாயப்பிரமாணம் நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியாய் இருந்தது.**
**கலா 3 : 24**

# ஆசரிப்பு கூடாரம்

## மாதிரியும் நிறைவேறுதலும்

பரிசுத்தமற்ற ஜனங்களுடைய இருதயத்தில் கர்த்தர் வாசம் பண்ண முடியாது ஆகையால் தேவன் மோசேக்கு ஆசரிப்பு கூடாரத்தின் மாதிரியை காண்பித்து செய்ய கூறினார். அதினால் அவர் ஜனங்களுக்கு மத்தியில் வாசம் பண்ண முடியும் யாத் 25 : 8 – 9.

ஆசரிப்பு கூடாரம் பலிகள், மரவேலைப்பாடுகள், ஆராதனை யாவும் தெய்வீக மாதிரியாக உருவாக்கப்பட்டு, மேலான ஒரு காரியத்தை குறிப்பிடுகிறது. உண்மையில் கிறிஸ்துவில் பரிபூரணமாக கூடிய நிழலான செயல் (எபி 8 : 5; 10 : 1) இந்த திட்டத்தில் பரிசுத்த ஆவியானவரின் மகிமையான வாசம்பண்ணுதல் கிறிஸ்துவின் வழியாக வரப்போகிற மேலான இரட்சிப்பை, தேவனுடைய கிரியையில் தெளிவாக காண முடியும்.




## ① ஆசரிப்பு கூடாரம்

விளக்கம் :

மனுஷனால் அல்ல மோசேக்கு தேவன் வெளிப்படுத்திய தெய்வீக மாதிரியின்படி ஆசிரிப்பு கூடார வேலைகள் செய்யப்பட்டன. இரண்டு பரிசுத்த ஸ்தலங்களும் (கூடாரத்தில் இரண்டு அறைகள் ) சுற்றிலும் பிரகாரங்களும் இதில் அடங்கும். எண் 3 : 7 – 8 பரிசுத்த ஸ்தலமானது 30X10X10 முழம் 45X15X15 அடி இரண்டாக பகுக்கப்பட வேண்டும். அதாவது பரிசுத்த ஸ்தலம், மகா பரிசுத்த ஸ்தலம். பிரகாரத்திற்கு தொங்கு திரைகள், மெல்லிய பஞ்சு நூலால் செய்யப்பட வேண்டும் யாத் 27 : 9 – 18. பரிசுத்த ஸ்தலமானது, மூடு திரைகள் மற்றும் திரைச்சீலைகளால் பிரிக்கப்பட வேண்டும். அது கிழக்கு திசையை நோக்கியதாகவும் தேவனுடைய பிரசன்னத்தை குறிப்பதாக, தேவன் நியமித்தபடி இருந்தது.

நோக்கம் :

தேவன் இஸ்ரவேல் ஜனங்களுக்கு நடுவில் வாசம் பண்ணுகிற ஸ்தலம் மற்றும் மனுஷனை சந்திக்கிற இடம் யாத் 25 : 8, 22 இதன் அமைப்பு, மர வேலைகள், சகல பணிவிடைகள் வழியாக தேவன் தம் பரிசுத்தத்தை, பாவ நிவாரண பலியாக ஒப்பு கொடுக்கப் படுதலை, இரட்சிப்பை அடையாளப்படுத்தினார். ஆசரிப்பு கூடாரத்தின் வேலையெல்லாம் முடிந்த பின்பு, கர்த்தருடைய மகிமை வாசஸ்தலத்தை நிரப்பிட்டு யாத் 40 : 34. அந்த மகிமையானது ஏறத்தாழ 480 வருடங்கள், சாலமோன் தேவனுடைய ஆலயத்தை கட்டும் வரை அங்கே தங்கியிருந்தது.

நிறைவேறுதல் :

கிறிஸ்துவே மெய்யான ஆசரிப்பு கூடாரம் எபி 8 : 2. கிறிஸ்துவை விசுவாசிக்கிற நீங்களும், நானும் பரிசுத்த ஆவியானவர் வாசம் பண்ணும் அவருடைய ஆலயமாக இருக்கிறோம். 1 கொரி 3 : 16. ஆசரிப்பு கூடாரமானது, முழுமையாக கிறிஸ்துவின் மூலம் வரப்போகிற இரட்சிப்பைக் குறித்ததான தேவ திட்டத்தை விவரிக்கிறது. – இரண்டு அறைகள் – கர்த்தருடைய பெரிதான கிருபை : இரத்தத்தினாலாகிய நீதி, பரிசுத்த ஆவியினால் கழுவி சுத்திகரிக்கப்படுதலும் நிரப்பப்படுதலும்.

## ② பிரகாரம்

விளக்கம் :



கீழ்ப்பக்க பிரகாரமானது 100 X 50 முழம் 150 X 75 அடி என்ற அளவிலும் அதில் வெண்கலத்தால் செய்யப்பட்ட தகன பலிபீடம் மற்றும் யாத் 27 : 1 – 8. வெண்கல தொட்டி யாத் 30 : 18 – 21 அடங்கும் பிரகாரத்தின் வாசலுக்கு கிழக்கு புறமான அகலத்திற்கு இளநீள நூலும், இரத்தாம்பர நூலும், சிவப்பு நூலும், திரித்த மெல்லிய பஞ்சு நூலும், தொங்கு திரைகள் செய்யப்பட வேண்டும் யாத் 27 : 16

நோக்கம் :


பலி மற்றும் சுத்திகரிப்புக்கான இடம் – தேவன் வாசம் பண்ண ஒரே வழி – தேவன் நியமித்த இரத்தத்தினாலாகிய பரிகாரத்தினால் மாத்திரமே பாவம் கழுவப்பட முடியும். ஆகவே தான் ஆசாரிய ஊழியத்திற்கு முன்பு ஆசாரியர்கள் தங்களை கழுவி சுத்திகரித்துக் கொள்வர்.

நிறைவேறுதல் :

பிரகாரம் எதை குறிக்கிறதெனில், தேவனோடு தொடர்பு கொள்வதும், உலகத்தினின்று பிரித்தெடுக்கப்படுதலும் ஒரே வாசல், இயேசு கிறிஸ்து யோவான் 10 : 9. அவருடைய தியாகத்தினாலே, மன்னிப்பும், பாவம் நிவிர்த்தியும் மனம் திரும்புகிற ஒரு பாவிக்கு கிடைக்கிறது எபி 9 : 22, ரோம 5 : 1. இரத்தம் சிந்தப்படுகிற வெண்கலத்திலான பலிபீடம் – முன் நிழலாய் கொடுக்கப்பட்டது. வெண்கல தொட்டியானது சுத்திகரிக்கப்படுதலையும், புதிதாக பிறத்தலையும் குறிக்கிறது எபே 5 : 26; தீத் 3 : 5. இவ்வாறாக நீதிமானாக்கப்பட்டால் தான் பரிசுத்த ஸ்தலத்தில் நுழைய முடியும்.

## ③ பரிசுத்த ஸ்தலம்

விளக்கம் :



பரிசுத்த ஸ்தலமானது 20X10X10 முழம் 30X15X15 அடி மற்றும் இதில் சமூகத் தப்பங்களை வைக்கும் மேஜை, பொன்னாலான குத்துவிளக்கு தூபபீடம் யாத் 25 : 23 – 40 ; 30 : 1 – 8. வாசலுக்கு முதலாவது திரையானது இளநீலநூலும் இரத்தாம்பரநூலும், சிவப்பு நூலும், திரித்த மெல்லிய பஞ்சுநூலாலும் செய்யப்பட்டது. யாத் 26: 36 ஆசாரியர்கள் மாத்திரமே, தேவனுக்கு முன்பாக ஊழியம் செய்யும்படி இங்கே நுழைய முடியும்.

நோக்கம் :

இது சுத்திகரிப்பும், தியாகபலியும் செலுத்தும் இடம் – தேவனோடு வாசம் செய்யும் வழி இது. பாவம் அடிக்கப்படும் இரத்தத்தினாலே நிவிர்த்தியாகும்.ஆசாரியர்கள் பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்குமுன் தங்களை சுத்திகரித்துக் கொள்ள வேண்டும்.

நிறைவேறுதல் :

மறுபடி ஜெனிபிக்கப்பட்ட வாழ்வை, நீதிமானாக்கப்பட்ட நிலையை இந்த பரிசுத்த ஸ்தலமானது குறிக்கிறது. இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறவன் ஜீவ ஆப்பத்தை உடையவன் யோவான் 6 : 35. அவருடைய ஒளியில் நடக்கிறவன் யோவான் 8 : 12. தேவனிடத்தில் நமக்காக வேண்டுதல் செய்கிறார் எபி 7 : 25. வெளி 8 : 3 ,4. பரிசுத்த ஸ்தலமானது புது சிருஷ்டியும் அனுதினமும் தேவனுடைய ஐக்கியத்தையும் குறிக்கிறது.

## ④ மகா பரிசுத்த ஸ்தலம்

விளக்கம் :

உட்புற ஸ்தலமானது 10 X10X10 முழம் 15X15X15 அடி அதில் உடன்படிக்கைப் பெட்டி, கிருபாசனம் மற்றும் கேரூபீன்கள் வைக்கப்பட்டு இருக்கிறது (யாத் 25 : 10 – 22, எபி 9 : 3 – 5) . இரண்டாவத தொங்குதிரையின் மூலம் இது பரிசுத்த ஸ்தலத்திலிருந்து பிரிக்கப்பட்டது (யாத் 26 : 31 – 33) அந்த திரையானது சித்திர தையல் வேலையால் நிறைந்தது (லேவி 16 :2, 14).


நோக்கம் :

கேரூபின்களுக்கு மத்தியில் தேவனுடைய மகிமை வாசம் பண்ணும் இடம். இரண்டாவது திரையானது எல்லாவற்றையும் தடுக்கிறது. பாவமுள்ள மனுஷன் பரிசுத்தமான தேவ பிரசன்னத்தில் நுழைய முடியும். பாவ நிவாரண பலி செலுத்தும் ஆசாரியன் அதின் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து கேரூபீன்கள் மேல் தெளிக்க வேண்டும். அது தனக்காகவும் தன் வீட்டாருக்காகவும் இஸ்ரவேல் சபையாராகிய ஜனங்களுக்காகவும் அவர்களுடைய பெயரை அவருக்கு முன்பாக வேண்டுதல் செய்ய வேண்டும், லேவி 16 : 17, யாத் 28 : 29.

நிறைவேறுதல்:

மகா பரிசுத்த ஸ்தலமானது. குறிப்பது என்னவெனில் தேவனுடைய கிருபையால் பரிசுத்த ஆவியானவர் வாசம் செய்யும் விசுவாச மார்க்கத்தாருடைய இருதயமே 1 தெச 5 : 23. இது கிருபையின் இரண்டாவது கிரியையை அடையாளப்படுத்துகிறது – பரிசுத்த ஆவியால் சுத்திகரிக்கப்படுதல். பரிகாரியாகிய கிறிஸ்துவின் இரத்தத்தினாலே, திரைச்சீலை கிழிக்கப்பட்டு வழி திறந்தது. இயேசு மரித்தபோது, திரைச்சீலை இரண்டாக கிழிந்தது. மத் 27 : 51. தேவப்பிரசன்னத்தை நாம் பெறும்படியாக அனுக்கிரகம் பெற்றோம் அவரோடு தியாக பலியினாலே எபி 10 : 19 – 20.

# ஆசரிப்பு கூடாரத்தின் முக்கியமான உபகரணங்கள்



**⑤ வெண்கல பலிபீடம்**

விளக்கம் :

வெண்கலத்தினால் உண்டாக்கப்பட்ட பலிபீடமானது பிரகாரத்திற்குள் ஆசரிப்பு கூடார வாசலுக்கு அருகே வைக்கப்பட வேண்டும் யாத் 27 : 1-8. அதற்கு மரத்தால் தண்டுகள் பண்ணப்பட வேண்டும். பலிபீடமானது 5X5X3 முழம் (7.5X7.5X4.5 அடி) இருக்க வேண்டும். நாலு மூலைகளிலும் நாலு கொம்புகளை உண்டாக்குவாயாக. அதை வெண்கல தகட்டால் மூட வேண்டும். இது ஒரு பெரிய அமைப்பு. உள்ளே நுழைகிற எல்லாருடைய கண்களும் தெளிவாக புலப்படும்.

நோக்கம் :

பாவத்திற்கும் பிராயசித்தம் செய்யும் பொருட்டு பலியிடப்படுகிறது. ஆத்துமாவிற்காகப் பாவம் நிவர்த்தி செய்கிறது  இரத்தமே லேவி 17 : 11. இரத்தம் சிந்துதல் இல்லாமல் மன்னிப்பு உண்டாகாது எபி 9 : 22. பலிபீடமானது நுழைவு வாயில் அருகே வைக்கப்பட்டிருப்பது எதை குறிக்கிறதெனில், பலியிடுதல் இல்லாமல் ஒருவனும் தேவனை சந்திக்க முடியாது.

நிறைவேறுதல்:

வெண்கல பலிபீடம் கிறிஸ்துவை குறிக்கிறது, உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற  தேவ ஆட்டுக்குட்டி யோவான் 1 : 29. அநேகருடைய பாவங்களை சுமந்து தீர்க்கும்படிக்கே ஒரே தரம் கிறிஸ்து பலியிடப்பட்டார் எபி  9 : 26. நமக்கு ஒரு பலிபீடமுண்டு எபி 13 : 10 நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிற கோபக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே ரோமர் 5 : 9 வெண்கல பலிபீடம் முதல் பெரிய கிரியையான கிருபையை குறிக்கிறது. மனந்திரும்புதலினால் உண்டாகிற  மீட்பு,  மற்றும் சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசம்.

**⑥ தொட்டி**

விளக்கம் :

வெண்கலத்தினாலான தொட்டி  வெண்கல பலிபீடத்திற்கும் ஆசரிப்பு கூடாரத்திற்கு இடையே காணப்படும் யாத் 30 : 17 – 21. ஸ்திரீகளின் தர்ப்பணங்களினாலே உண்டாக்கப்பட்டது யாத்  38 : 8 அது தண்ணீரினால் நிரப்பப்பட்டு இருக்கும்.



நோக்கம் :

பலியிட்ட பின் ஆசாரியர்கள் பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்கு முன், தங்களை சுத்திகரித்துக் கொள்ள வேண்டும். அவர்கள் சாகாதபடிக்கு யாத் 30 : 20, 21. தங்கள் கைகளையும் கால்களையும் கழுவக் கடவர்கள்.

நிறைவேறுதல் :

தொட்டி உணர்த்துவது சுயபரிசோதனை, கழுவப்படுதல், மறுபடியும்  பிறப்பது தீத்து 3 : 5 ஆவியினாலும், வசனத்தினாலும் எபே 5 : 26 யோவான் 15 : 3 எப்படி ஆசாரியர்கள், தங்களை சுத்திகரித்துக் கொண்டு பிரவேசிக்கிறார்களோ, அதுபோலவே விசுவாசிகளும் தங்களை  பரிசுத்தப்படுத்தினால்தான் கர்த்தரைத் தொழுது சேவிக்க முடியும். எல்லா அநியாயத்தையும் நீக்கி  நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராய் இருக்கிறார் 1 யோ 1 : 7, 9.


> வெண்கல பலிபீடவும், தொட்டியும் நீதியையும், மறுபடி பிறப்பதைக் குறிக்கிறது –  பாவம் மன்னிப்பு, இருதயத்தில் சுத்தமும்  ஒருவரை கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டியாக்குகிறது (2கொரி 5 : 17, ரோ 8 : 2)

## ⑦ சமூகத் தப்பங்களை வைக்கும் மேஜை

விளக்கம் :

சீத்தீம் மரத்தாலாகிய சுத்தமான பொன்னால் செய்யப்பட்டது யாத் 25 : 23 – 30,

மேசையின் அளவு 2 X1 X1.5 முழம் (3 X1.5 X 2.25 அடி) மேஜையின் மேல் நித்தமும் சமூகத்தப்பங்களை வைக்கக்கடவாய். ஆரோனும் அவன் குமாரனும் போஜனம் பண்ணும்படி ஏற்படுத்தப்பட்டது. ஓய்வுநாள் தோறும் அது இரண்டு அடுக்காக வைக்கப்பட வேண்டும்.




நோக்கம் :

தேவன் தொடர்ந்து தம்முடைய ஜனங்களுக்கு ஆகாரம் அருளிச் செய்வார் என்பதை அந்த மேஜை ஞாபகம் குறியாக காட்டுகிறது. கர்த்தருடைய சந்ததியில் சமூகத்து அப்பமாக இருக்கக்கடவது லேவி 24 : 5-9.

நிறைவேறுதல்

மேஜை கிறிஸ்துவை குறிக்கிறது அவரே ஜீவ அப்பம் யோவான் 6 : 35. எப்படி ஆசாரியர்கள் அந்த அப்பத்தைப் புசிக்கிறார்களோ, அதே போலதான் விசுவாசத்தினாலே கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவர்கள் ஒவ்வொருவரும் தேவனுடைய வார்த்தையினாலே பிழைக்கும்படி அருளப்பட்டிருக்கிறது மத் 4 : 4. வானத்திலிருந்து வந்த ஜீவனுள்ள அப்பமாக கிறிஸ்துவே தம் ஜனங்களை போஷிக்க வல்லவராய் இருக்கிறார்.



## ⑧பொன்னாலான குத்துவிளக்கு ( கிளைகளைக் கொண்டது)

விளக்கம் :

அது பொன்னினால் அடிப்படை வேலையாக செய்யப்பட வேண்டும் யாத் 25 : 31 – 40 குத்துவிளக்கில் நடுவில் தண்டும் அதில் ஒரு பக்கத்தில் மூன்று கிளைகளும், மறுபக்கத்தில் மூன்று கிளைகளும் விட வேண்டும். ஐந்து அடி உயரமுள்ள 7 விளக்குகளை உடையது. அது வாதுமைகொட்டைக்கு ஒப்பான மொக்குகளும், பூக்களும், பழங்களும் இருக்கும்படியாக அலங்கரிக்கப்பட வேண்டும்.

நோக்கம் :

பரிசுத்த ஸ்தலத்தில் மேஜைக்கு எதிர்புறம், எப்போதும் எரிந்து கொண்டிருக்கும்படி வைக்கப்பட வேண்டும் யாத் : 27 : 21 – 22. சாயங்காலம் தொடங்கி விடியற் காலம் மட்டும் ஒலிவ எண்ணையை ஊற்றி விளக்கை எரிய வைக்கக்கடவர்கள்.


நிறைவேறுதல் :

குத்துவிளக்கு, உலகத்திற்கு வெளிச்சமாய் இருக்கிற கிறிஸ்துவை குறிக்கிறது யோவான் 8 : 12. விசுவாசிகள் தங்களுக்கென்று தாங்களே வெளிச்சமாக இருப்பதில்லை. இருளில் இருந்து வெளிச்சத்தை பிரகாசிக்க சொன்ன தேவன் –2கொரி 4 : 6. நீங்கள் உலகத்திற்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள் மத் 5 : 14 – 16 அவரே சபைக்கு வெளிச்சம் வெளி 1 : 20.

## ⑨ தகன பலிபீடம் (பொன்னாலான தூபபீடம்)

விளக்கம்

தூபங்காட்டுகிறதற்கு ஒரு தூபப்பீடத்தையும் சீத்திம் மரத்தினால் உண்டாக்குவாயாக யாத் 30 : 1 – 10. அது 1 X 1 X 2 முழம் (1.5 X 1.5 X 3 அடி) மகா பரிசுத்த ஸ்தலத்தின் திரைக்கு முன்பதாக வைக்கப்பட வேண்டும். காலை மற்றும் மாலை தோறும் அதின் மேல் தூபம் காட்டக்கடவன்.



நோக்கம் :


என் விண்ணப்பம் உமக்கு முன்பாகத் தூபமாகவும் (சங்கீதம் 141 : 2) என்பது ஜெபத்தை குறிக்கிறது. ஏனெனில் வெண்கல பலிபீடத்தில் இருந்து தியாக பலியானது தகனிக்கப்படுகிறது. ஜெபமானது பலியுடன் ஒன்றிணைக்கப்படுகிறது. சில பலிகளின் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து தூபபீடத்தின் கொம்புகளின் மேல் பூசுவார்கள். (லேவி 4 :7, 18) அதாவது இஸ்ரவேல் ஜனங்களுக்கு சுத்திகரிப்பிற்கு ஞாபக குறியாகவும் பிராயச்சித்தமாகவும் என்னப்படுகிறது.மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் நுழையும் முன் ஆசாரியன் பிராயச்சித்தம் செய்து இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து பலிபீடத்தின் கொம்புகளின் மேல் பூசி பரிசுத்தப்படுத்தக்கடவன் (லேவி 16 : 18). உடன்படிக்கை பெட்டிக்கு முன்பாக திரைக்கு முன் தூபபீடமானது ஜெபம் மற்றும் விண்ணப்பத்தை தேவனிடத்தில் கொண்டு சேர்ப்பதற்கான வழியாக அடையாளப்படுத்தப்படுகிறது.

நிறைவேற்றுதல் :

பொன்னாலான பலிபீடம் ஜெபங்களோடு செலுத்தும் தூப வர்க்கம் (வெளி 8 : 3-4). கிறிஸ்துவே மகா பிரதான ஆசாரியர். எப்பொழுதும் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக விண்ணப்பம் செய்கிறவர் (எபி 7 : 25). ஆகையால் பரிசுத்தவான்களின் ஜெபம் கேட்கப்படுகிறது. பூசப்பட்ட இரத்தமானது நிழலாட்டமானது. கிறிஸ்து தன்னை தானே பலியாக ஒப்புக்கொடுத்ததினால் ஆராதனை ஏற்றுக் கொள்ளக் கூடியதாக சுத்திகரிக்கப்பட்டது .விசுவாசிகளுக்கு பலிபீடமானது என்ன உணர்த்துகிறது எனில் பரிசுத்தமும் தேவனுக்கு பிரியமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டும் (ரோமர் 12 : 1).

Printed Matter -Posted Under Rule 114 & 121 P&T Guide Indian Constitution Act 25th & 19(1) Section
TAMIL EDITION - FOR PRIVATE CIRCULATION ONLY

## ⑩ உடன்படிக்கை பெட்டி



விளக்கம்

உடன்படிக்கை பெட்டியானது சீத்தீம் மரத்தினால் பண்ணப்பட்டு பசும்பொன் தகட்டால் மூடுவாயாக (யாத் 25 : 10- 22). அதன் அளவு 2.5 X 1.5 X 1.5 முழம் (3.75X 2.25X2.25அடி) பெட்டியின் உள்ளே கற்பலகைகள் மன்னா வைக்கப்பட்ட பொற்பாத்திரம் ஆரோனின் துளிர்த்த கோல் (எபி 9 : 4). அதை சுமப்பதற்கு தண்டுகளும் வளையங்களிலே பாய்ச்சப்பட்டிருக்க வேண்டும். அவைகளை அன்னியர் ஒருவரும் தொடக்கூடாது.

நோக்கம்

ஆசரிப்பு கூடாரத்தில் பரிசுத்தமான ஒன்று இந்த உடன்படிக்கையை பெட்டி. இஸ்ரவேலரோடு தேவன் செய்த உடன்படிக்கை வெளிப்படையானது. தேவனுடைய போஷித்தல் கற்பனை ஆசாரியத்துவம் தேவன் தம் ஜனங்களோடு கொண்ட என்றும் அழியாத உறவின் அடையாளம். உடன்படிக்கை பெட்டி இருந்த இடம் எங்கும் தேவ மகிமை வெளிப்பட்டது.

நிறைவேற்றுதல்

உடன்படிக்கை பெட்டி குறிப்பது கிறிஸ்து நியாயப்பிரமாணத்தை பூரணமாய் நிறைவேற்றி (மத்தேயு 5 : 17).அவரே வானத்திலிருந்து வந்த மெய்யான அப்பம் (யோவான் 6 : 51) அவரே என்றென்றைக்குமான நித்திய பிரதான ஆசாரியராய் இருக்கிறார் (எபி 7 : 24). புதிய உடன்படிக்கையில் உள்ளான கிறிஸ்துவை நாம் காண்கிறோம் பெட்டியில் அல்ல ஒவ்வொரு பரிசுத்தமாக்கப்பட்ட விசுவாசிகளின் இருதயத்திலும் அவர் வாசம் பண்ணுகிறார்.

## ⑪ கிருபாசனம் மற்றும் கேரூபின்கள்



விளக்கம்

பசும்பொன்னினாலே கிருபாசனத்தை பண்ணுவித்து, கேரூபீன்கள் அவைகளை மூடும்படி இருக்க கடவது. (யாத் 25 : 17-22).அதன் அளவு 2.5 X 1.5 முழம் 3.75 X 2.25 அடி. இரண்டு பொன்னாலான கேரூபீன்களும் தங்கள் செட்டைகளை உயர விரித்து, ஒன்றுக்கொன்று எதிர்முகமுள்ளவைகளாயிருக்கடவது.

நோக்கம்

இஸ்ரவேல் ஜனங்களின் மீது தேவனுடைய மகிமை இதன் நடுவில் இருந்து கர்த்தர் கற்பிப்பவைகள். பாவ நிவர்த்தி செய்யும் நாளில் பிரதான ஆசாரியன் கிருபாசனத்துக்கு முன் தெளிக்கும் இரத்தம்(லேவி 16 : 14, 15) கேரூபீன்களுக்கு நடுவே கிருபாசனம் மீதில் தேவனுடைய மகிமை இறங்கி வந்து மோசேயோடு பேசுவார் அங்கே நான் உன்னை சந்திப்பேன் .மோசே தன்னோடு பேசுகிறவரின் சத்தம் இரண்டு கேரூபீன்களின் நடுவில் இருந்து உண்டாக கேட்பான் யாத் 25 : 22 ; எண் 7 : 89.

நிறைவேறுதல்

கிருபாசனம் கிறிஸ்துவில் பூரணமாய் நிறைவேறிற்று. அவரே கிருபாதார பலியானார் (ரோமர் 3 : 25, 1 யோவான் 2 : 2). கேரூபீன்கள் பரிசுத்தத்தையும் தேவனுடைய மகிமையும் தெய்வீக நியாயத்தீர்ப்பையும் இரக்கத்தையும் கிறிஸ்துவின் தியாகபலியில் காணலாம். புதிய உடன்படிக்கையில் பரிசுத்தமாக்கப்பட்ட விசுவாசி தேவன் வாசம் பண்ணும் ஸ்தலமாக மாறுகிறார். அங்கே கிருபையும் மகிமையும் தரித்திருக்கும். பொன்னினால் அல்ல, தேவனுடைய ஆவி உங்களின் வாசமாயிருக்கிறார் (1கொரி 3 : 16, 2 கொரி 6 : 16). கிறிஸ்து பலியாக தன்னைத்தானே ஒப்புக்கொடுத்ததினால் ஆவியானவர் வாசம் செய்யும் ஸ்தலமாகவும் தேவனோடு உள்ள உறவை சரி செய்தும் உள்ளார்.

**அந்நாட்களுக்குப்பிற்பாடு, நான் இஸ்ரவேல் குடும்பத்தோடே பண்ணப்போகிற உடன்படிக்கையாவது; நான் என் நியாயப்பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து, அதை அவர்கள் இருதயத்திலே எழுதி, நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.**
**எரேமியா 31 : 33**

**THE CHURCH OF GOD WORSHIP PLACE:**
**2 / 227, சர்ச் தெரு, கோலார்பட்டி, பொள்ளாச்சி - 642 107**
SUNDAY SERVICE : 10 AM - ஞாயிறு ஆராதனை : காலை 10 மணி
Come & Worship with Real Truth

Tamil Editor : W.S.VEDHA, THE CHURCH OF GOD, 2/227 CHURCH STREET,-KOLARPATTI & P.O, SOUTH INDIA - 642 107. Cell : 0091 95975 62641.
Printer : Joy Printers, Pollachi - 642 001. Cell : 96592 54316